ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 456) Dec (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)………...……………………………………3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)……..……………………………..25

3. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)………...………………………………………30

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 421)

6-8-7. பூவைகள் போல் நிறத்தன் புண்டரீகங்கள் போலும் கண்ணன்
யாவையும் யாவரும் ஆய் நின்ற மாயன் என் ஆழிப் பிரான்
மாவை வல் வாய் பிளந்த மதுசூதற்கு என் மாற்றம் சொல்லி
பாவைகள் தீர்க்கிற்றிரே வினையாட்டியேன் பாசறவே

பொருள் – பாவைகளே! காயாம்பூ போன்று காண்பதற்கு இனிமையாக உள்ள நிறத்தைக் கொண்டவனாகவும்; அதற்குச் சேரும்விதத்தில் தாமரை போன்று திருக்கண்கள் கொண்டவனாகவும்; இப்படியாக அவனுக்கே உரிய திருமேனி மட்டும் அல்லாமல், அனைத்து அசேதநங்களையும் அனைத்து சேதநங்களையும் தனது சரீரமாகக் கொண்டு அந்தந்த சரீரங்களில் நிற்பவனாகவும்; அந்தந்த சரீரங்களின் தோஷங்களிலிருந்து விலகி நிற்கும்படி, வியக்க வைக்கும் சக்தி கொண்டவன் என்பதால், அவற்றுடன் கலந்து நிற்கும்போதும் கலக்காமல் உள்ளவனாகவும்; தனது திருக்கரமும் திருச்சக்கரமும் என்றுள்ள தனது வடிவழகை எனக்குக் காண்பித்து உபகாரம் செய்பவனாகவும்; தன்னை அனுபவித்தபடி உள்ள கோபிகைகளுக்குத் தடையாக இருந்த கேசியை, அவனுடைய வாயைப் பிளந்து கிழித்தவனாகவும்; அடியார்களுடைய விரோதிகளை அழிப்பதையே தனது இயல்பாக உள்ளவனாகவும் இருக்கின்ற மதுசூதனனுக்கு, கிளிகளுக்கும் பறவைகளுக்கும் கூறப்பட்ட எனது சொற்களை நீங்கள் உரைத்து, உங்கள் மூலம் எனது பாபங்களை நீக்கிக் கொள்ளவல்ல நிலையில் உள்ள எனது பசலை நிறத்தைப் போக்குவீர்களோ!

அவதாரிகை – "பரமசேதநன் பொகட்டுப் போனான்; சைதந்யலேசமுள்ள பக்ஷிகள், பறந்து போவனவும் அந்யபரமாவனவுமாயிற்று; இதுக்கு ஹேது சேதங்களாகையோ?" என்று பார்த்து, அசேதநமான பாவையையிரக்கிறாள். அசேதகமுங்கூட எழுந்திருந்து கார்யஞ் செய்யவேண்டும்படி காணும் இவள் அவஸ்த்தை.

விளக்கம் - கடந்த சில பாசுரங்களில் அறிவுள்ள பறவைகளிடம் வேண்டி நின்ற இவள், இந்தப் பாசுரத்தில் அறிவற்ற பாவையை வேண்டுவது ஏன் என்பதற்கு விடை தருகிறார். ஸர்வேச்வரன் விட்டுச்சென்றான்; சிறிது அறிவுள்ள பறவைகளும் பறந்து செல்லுதல் அல்லது மற்ற செயல்களில் கவனம் கொள்ளுதல் என்பதாக இருந்தன; இதற்குக் காரணம் இவை அறிவுள்ளதாக இருப்பதால் அல்லவோ என்று சிந்தித்தாள். ஆகவே அறிவற்ற பாவையை வேண்டுகிறாள். ஆனால் அறிவற்ற வஸ்துக்கள் கார்யம் செய்ய இயலுமோ என்றால், அறிவில்லாத அந்தப் பொருள்கள் கூட எழுந்து வந்து கார்யம் செய்ய வேண்டியதாக இவள் நிலை உள்ளது என்று கருத்து.

வ்யாக்யானம் - (பூவைகள் போல் நிறத்தன்) ஆண் பெண்ணாம்படியான நிறம் படைத்தவன். "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்னும்படியே. பேற்றுக்குப் பாவையின் காலிலே விழும்படியான வடிவு படைத்தவன். பூவைப்பூப் போன்ற வடிவை யுடையவன். (புண்டரீகங்கள் போலுங் கண்ணன்) ஒரு பூ ஒரு பூப்பூத்தாற்போலே காணும் வடிவும் கண்ணுமிருக்கிறபடி; காயாம்பூ தாமரை பூத்தாற்போலே யிராநின்றது. சேதநாசேதந விபாகமறக் காற்கீழே விழும்படியான கண் படைத்தவன்.

விளக்கம் – (பூவைகள் போல் நிறத்தன்) - ஒரு ஆண்மகன், பெண் போன்று உள்ளதான விதத்தில் நிறம் கொண்டவன். ஆனால், ஒரு வடிவமானது ஆணைப் பெண்ணாக்குமோ என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; பாலகாண்டம் - பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் – ஆண்களின் மனத்தையும் கவரும் இராமன் - என்பதற்கு எற்ப ஆகும். தான் அடையவேண்டிய பேற்றின் பொருட்டு, பாவை ஒன்றின் கால்களில் விழும்படியான வடிவம் கொண்டவன். பூவை மலர் போன்ற வடிவம் கொண்டவன். (புண்டரீகங்கள் போலுங் கண்ணன்) – ஒரு மலரே மற்றொரு மலரைப் பூத்தது போன்று அவனுடைய திருமேனியும் திருக்கண்களும்

உள்ளன. அதாவது ஒரு காயாம்பூவானது, தாமரை மலரைப் பூத்தது போன்றுள்ளது. சேதநங்கள் மற்றும் அசேதநங்கள் என்பதான வேறுபாடு ஏதும் இன்றி, அனைத்தும் தனது திருவடிகளில் விழும்படியான திருக்கண்கள் கொண்டவன்.

வ்யாக்யானம் - (யாவையும் யாவருமாய் நின்ற மாயன்) சிலரோடு கலக்கும்போது அவர்கள் தாங்களாய்க் கலக்குமவன். சேதநாசேதங்களுக்கு ஆத்மாவாய் நின்றவன். "ததநுப்ரவிச்ய ஸச்ச த்யச்சாபவத்". ஸம்ச்லேஷ தசையில் "ஏக வஸ்து" என்னலாம்படி கலக்கவல்லவன். (மாயன்) அவர்களாய்க் கலவாநிற்கச்செய்தே, தனக்கு அங்கொரு தொற்றற்றுப் போருமவன்; ஸர்வாந்தர்யாமி யாயிருக்கச் செய்தே, "அநச்நந்நந்யோ அபிசாகசீதி" என்று, இவற்றின் தோஷம் தன் பக்கல் தட்டாதபடியிருக்கை. ஜகதாகாரனாய்க் கொண்டு இவர்களோடு பிரித்து ப்ரதிபத்தி பண்ணவொண்ணாதபடி நிற்கச்செய்தே, அசித்தினுடைய பரிணாமமாதல், சித்தினுடைய ஸுகித்வ துக்கித்வங்களாதல் தட்டாதபடி நிற்கை. என்னோடே பரிமாறுமாபோலேகிடீர் எல்லாரோடும் கலந்து நின்றே ஒட்டற்று இருக்கும்படி என்கைக்காக "யாவையும் யாவருமாய் நின்ற மாயன்" என்கிறாள்; இல்லையாகில் இப்போது இது தேட்டமன்றே இப்ப்ரகரணத்துக்கு. "அழுக்குப் பதித்த வுடம்பி"ற்காட்டில் பரஞ்சுடருடம்புக்கு உண்டான வாசி சொல்லுகிறது.

விளக்கம் – (யாவையும் யாவருமாய் நின்ற மாயன்) - சிலரோடு கலக்கும்போது, அவர்கள் தாங்களாகவே இருக்கும்படியாகக் கலப்பவன். அனைத்து சேதந அசேதநங்களுக்கும் ஆத்மாவாக நிற்பவன்; இதற்கு ப்ரமாணம் தைத்திரீய ஆனந்தவல்லி – தத் அநுப்ரவிச்ய ஸத் ச த்யத் ச அபவத் – அவற்றில் புகுந்து சேதநமாகவும் அசேதநமாகவும் ஆனான் - என்பது காண்க. சேர்ந்துள்ளபோது, ஒரே ஒரு வஸ்து என்று கூறலாம்படியாகக் கலக்க வல்லவன். (மாயன்) - இவ்விதம் அனைத்துடன் கலந்து நிற்கும்போதிலும் அவற்றின் தோஷங்கள் தன்னைத் தீண்டாதபடி உள்ளவன். அதாவது அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளபோதிலும், உபநிஷத்தில் - அநச்நந்நந்யோ அபிசாகசீதி - கர்ம பலனை அனுபவிக்காமல் உள்ளான் - என்பதற்கு ஏற்ப, அவற்றின் தோஷங்கள் தன்னிடம் அண்டாமல் இருத்தல். இந்த ஜகத்தின் உருவமாக உள்ளதாகவும், இவற்றிலிருந்து பிரித்து எண்ண இயலாதபடி உள்ளபோதிலும், அசித் பொருள்கள் போன்று ஒரு வரையறைக்குள் இருத்தல் மற்றும் சித் வஸ்த்துக்களின் ஸுகதுக்கங்கள் அண்டாதபடி இருத்தல் என்று உள்ளான். "என்னுடன் கலந்து நிற்பது போன்று,

தான் அனைவருடன் கலந்து நின்று, ஒட்டாமல் உள்ளான்" என்பதை உணர்த்த "யாவையும் யாவருமாய் நின்ற மாயன்" என்கிறாள். இவ்விதம் இல்லையென்றால், இப்போது இந்த இடத்திற்கு இது அரிதாகிவிடும் அல்லவோ? அதாவது திருவாய்மொழி (6-3-7) – அழுக்குப் பதிந்த உடம்பு - என்னும் சரீரத்தைக் காட்டிலும் பரஞ்சுடரின் திருமேனிக்கு உள்ள வேறுபாடு கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (என்னாழிப்பிரான்) தன்னுடைய அஸாதாரணமான விக்ரஹத்தை எனக்காக்கினவன். "யாவையும் யாவருமாய் நின்றமாய"னென்று ஜகதாகாரதையைச் சொல்லி வைத்து, "என்னாழிப் பிரான்" என்கிறாரிறே: அஸாதாரணமான வடிவுக்குத் தாம் ஈடுபட்டப்படி. "நீராய் நிலனாய்" என்று வைத்து, "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்" என்றாரிறே. அவனுக்குப் புறம்பாயிருப்ப தொன்றில்லை என்றநுஸந்திக்கைக்காக, ஜகச்சரீரன் என்னுங்காட்டில், அத்தோபாதியிது உத்தேச்யமாமோ? "பரஞ்சுடருடம்பாய்" என்றும், "அழுக்குப் பதித்த வுடம்பாய்" என்றும் ஒன்றை ஹேய ப்ரத்யநீகமாகவும், ஒன்றை ஹேய மிச்ரமாகவும் சொல்லிற்றிறே.

விளக்கம் – (என் ஆழிப்பிரான்) - தனக்கு உரித்தான தனது திருமேனியை எனக்கு என்று ஆக்கியவன். ஆனால் "எனக்கு ஆக்கினவன்" என்று கூறுவதால் இவள் அவன் திருமேனியில் எப்போதும் ஈடுபட்டபடி இருப்பாளோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; "யாவையும் யாவருமாய் நின்ற மாயன்" என்று இந்த ஜகத்தையே தனது உருவமாகக் கொண்டு அவன் நிற்கும் நிலையைக் கூறிய பின்னர், "என் ஆழிப்பிரான்" என்றார்; அதாவது அவனுக்கே உரிய திருமேனியில் ஈடுபட்டபடி உள்ளதால் அல்லவோ இவ்விதம் கூறினார்? இந்த ஜகத்தையே தனது திருமேனியாகக் கொண்டுள்ள நிலையைக் காட்டிலும், அவனுக்கு உரிய திருமேனியை அனுபவிப்பதே தகுந்தது என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; திருவாய்மொழி (6-9-1) - நீராய் நிலனாய் - என்று கூறியபோதிலும் தொடர்ந்து, திருவாய்மொழி (6-9-1) – கூரார் ஆழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் - என்று கூறினார். ஆனால், இந்த ஜகத்தையே தனது உருவமாகக் கொண்டுள்ள தன்மை என்பது அடையவேண்டிய இலக்கு இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "அவனை விடுத்து வேறு ஏதும் இல்லை" என்று உரைப்பதற்காக, இந்த ஜகத்தையே தனது சரீரமாகக் கொண்டவன் என்று கூறப்பட்டது; ஆகவே, அவனுக்கு உரிய திருமேனியைக் காட்டிலும் இதற்கு ஏற்றமோ? திருவாய்மொழி

(6-3-7) - பரஞ்சுடருடம்பாய் – என்றும், திருவாய்மொழி (6-3-7) – அழுக்குப் பதிந்த உடம்பு – என்றும், ஒன்றைத் தோஷங்கள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாகவும், ஒன்றைத் தோஷங்களுடன் கலந்துள்ளதகவும் கூறினார் அல்லவோ?

வ்யாக்யானம் - (மாவையித்யாதி) இவ்வடிவழகை புஜிப்பிக்கைக்கு விரோதி நிரஸநம் பண்ணுகை இவனுக்குக் காதாசித்கமன்றுகிடீர். (மதுசூதற்கு) புழுக்குறித்தது எழுத்தாமா போலன்றிக்கே விரோதி நிரோஸநம் நித்யமாயிருக்கை. (என் மாற்றஞ் சொல்லி) கன்மின்களென்று உங்களுக்குச் சொன்னத்தைச் சொல்லி. (பாவைகள் தீர்க்கிற்றிரே) பரமசேதநன் பொகட்டுப் போனான், சைதந்ய லவமுடைய இவை போகிறனவில்லை; இனி, நீங்கள் என் துக்கத்வத்தைப் போக்கவல்லிகோளோ? அப்ரதிஷேத மாத்ரத்தைக் கொண்டு இவற்றைக் காரியங்கொள்ளப் பார்க்கிறாள். (வினையாட்டியேன்) உங்களைக் கொண்டாடுகை தவிர்ந்து, கார்யங்கொள்ளும்படியான துக்கத்தை ப்ராப்தையானேன்; "மாசுச:" என்று சொன்னவன் விளைத்த சோகத்தை, அசேதநங்களைக் கொண்டு தீர்க்கவிருக்கிற மஹாபாபியானேன். பாசறவு - துக்கம்.

விளக்கம் – (மாவையித்யாதி) - இத்தகைய வடிவழகை அனுபவிக்கும்படிச் செய்வதற்குத் தடையாக உள்ள விரோதிகளை அழித்தல் என்பது இவனுக்கு எப்போதும் உள்ளது. (மதுசூதற்கு) – ஒரு புழுவால் மண் மீது இடப்பட்ட கோடுகளானவை, எழுத்து போன்று தற்காலிகமாகத் தென்படுவது போன்று அல்லாமல், இவன் விரோதிகளை அழித்தலானது எப்போதும் உள்ளது. (என் மாற்றஞ் சொல்லி) – "கன்மின்கள்" என்று உங்களுக்கு உரைத்தவற்றை அவனிடம் நீங்கள் கூறி. (பாவைகள் தீர்க்கிற்றிரே) - ஸர்வேச்வரனும் பறவையும் உள்ளபோது, பாவைகளை நோக்கி ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார். அனைத்து சேதநங்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்னை விட்டுச் சென்றான். சிறிதேனும் அறிவு கொண்ட இந்தப் பறவைகளும் எனக்காக அவனிடம் தூது செல்லவில்லை; ஆகவே பாவைகளாகிய நீங்கள் எனது துக்கத்தை விலக்கவல்லீர்களோ? ஆனால், அறிவற்ற பொருள்களை நோக்கி இவ்விதம் கூறினால், அவை இவளுடைய கார்யத்தைச் செய்யுமோ என்பதற்கு விடை கூறுகிறார். இவை தன்னை விலக்காது என்ற ஒரு தன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு, இவை மூலம் தனது கார்யம் செய்து கொள்ள முயல்கிறாள். (வினையாட்டியேன்) - உங்களை நான் கொண்டாடுவதை விடுத்து, உங்கள்

மூலமாக எனது செயலை நிறைவேற்றிக் கொள்ளும்படியான துக்கத்தை நான் அடைந்துள்ளேன். அல்லது, கீதை (18-66) - மாசுச: - வருந்தாதே - என்று கூறியவன் உண்டாக்கிய துக்கத்தை, அசேதந வஸ்து கொண்டு தீர்க்கும்படியான பெரிய பாபம் செய்துள்ளேன்.

6-8-8. பாசறவு எய்தி இன்னே வினையேன் எனை ஊழி நைவேன்
ஆசு அறு தூவி வெள்ளைக் குருகே அருள் செய்து ஒரு நாள்
மாசு அறு நீலச் சுடர் முடி வானவர் கோனைக் கண்டு
ஏசு அறும் நும்மை அல்லால் மறு நோக்கு இலள் பேர்த்து மற்றே

பொருள் – பறப்பதில் குறைவு இல்லாதபடியான சிறகுகள் கொண்டதாகவும், உள்ளத்தில் இருக்கின்ற தூய்மை வெளியே புலப்படும்படி உள்ள வெண்மையான சிறகுகள் கொண்டதாகவும் உள்ள குருகே! எனது விரகத்திற்கு முடிவு காண இயலாதபடியான பாபம் கொண்ட நான், துக்கத்தால் நிறம் இழந்து, இப்படியாகவே எத்தனை கல்பகாலங்கள் தளர்ந்தபடி இருப்பேன்? ஆகவே, அழுக்கு அற்றதான நீலச்சுடர் கொண்ட தலைமுடி உள்ளவனும், நித்யஸூரிகளை ஆள்பவனும் ஆகிய ஸர்வேச்வரனை நீ கண்டு, "தோஷம் ஏதும் இல்லாத உம்மை அல்லாமல் வேறு எந்த ஒரு பொருளையும் மறித்துப் பார்ப்பதில்லை என்று உள்ளாள்" என்பதாகக் கூறவேண்டும். இப்படியாக எனக்கு நீ ஒரு நாள் உபகாரம் செய்யவேண்டும்.

அவதாரிகை - முன்பே நின்ற குருகைக் குறித்து, நித்யசூரிகளைப்போலே உம்மாலல்லது செல்லாதே, உம்மைப் பிரிந்து நோவுபடாநின்றா ளென்று சொல் என்கிறாள்.

விளக்கம் - அங்கு வந்து நின்ற குருகை நோக்கி "அவனிடம் சென்று 'நித்யஸூரிகளுக்கு நீ இல்லாமல் எவ்விதம் ஏதும் நிகழாதோ, அதனைப் போன்று உம்மால் அல்லாமல் ஏதும் நிகழாமல் உள்ளவளாக, உம்மைப் பிரிந்து நோவு பூண்டு நிற்கிறாள்' என்று கூறுவாயாக", என்கிறாள்.

வ்யாக்யானம் - (பாசற இத்யாதி) "இன்னம் சில காலங் கழித்தால் அறிவிக்கிறோம்" என்னுமளவா யிருந்ததோ என் தசை? (பாசறவெய்தி) பாசென்று பசுமையாய்,

அத்தால் நினைக்கிறது நீர்மையாய், அது அறுகையாவது வைவர்ண்யத்தோடே வ்யாப்தமாகை. (இன்னே) "எப்படி வைவர்ண்யத்தை யடைந்தது?" என்னில், என்னைக் கண்ட உங்களுக்குச் சொல்லவேண்டாவிறே. விஷயம் ஸாவதியாகிலிறே இது அளவுபட்டிருப்பது? இதுக்கு ஒரு பாசுரமிட்டுச் சொல்லப்போகாது; உடம்பைக் காட்டுமத்தனை. பாசுரமிட்டுச் சொல்லப் போகாமை, படியெடுத்துக் காட்டுகிறாள்.

விளக்கம் - (பாசற இத்யாதி) – "எனை ஊழி நைவேன்" என்று ஏன் கூறவேண்டும் என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார். இவளிடம் பறவைகள், "இன்னம் சிறிது காலம் கழிந்த பின்னர் உனது நிலையை அவனிடம் அறிவிக்கிறோம்" என்றன; இதற்கு இவள், "அவ்விதம் பொறுத்திருக்கும்படி என் மனம் உள்ளதோ?" என்கிறாள். எனது சரீரம் பசலை நிறம் அடைந்ததால் "மெதுவாகச் செய்கிறோம்" என்று இருக்கலாகாது என்கிறாள். (பாசறவெய்தி) - பாசு என்பது பசுமை, அதனால் எண்ணப்படுவது நீர்மை, அது அறுதல் என்பது பசலை நிறத்தோடு முடிந்து நிற்கும் நிலை. (இன்னே) - அந்தக் குருகுகள் இவளிடம், "இது போன்ற பசலை நிறம் உனக்கு எப்படி வந்தது?", என்றதற்கு விடை கூறுகிறாள். என்னை கண்ட உங்களுக்கு இதனை நான் கூறவேண்டாம் அல்லவோ? அனுபவிக்கப்படும் விஷயத்திற்கு ஒரு எல்லை இருந்தால் அல்லவோ இதற்கு ஒரு முடிவு இருக்கும். இதனைச் சொற்கள் கொண்டு கூற இயலாது, சரீரத்தில் உணரலாம் என்று காண்பிக்கிறாள்.

வ்யாக்யானம் - (வினையேன்) விச்லேஷமும் ஸம்ச்லேஷத்தோபாதியாகப் பெற்றிலேன்; அது காதாசித்கதமாய், இது நித்யமாயிருக்கிறபடி. (வினையேன்) கலக்கப் பெறாவிட்டால் மீண்டு கைவாங்க வொண்ணாதபடியான பாபத்தைப் பண்ணினேன். (எனையூழி நைவேன்) - சைதில்யத்தோடே யெத்தனை கல்பம் சென்றது? முன்பு பிரிந்தார் பதினாலாண்டாதல், பத்து மாஸமாதல். (ஆசறு தூவி வெள்ளைக்குருகே) பழிப்பற்ற சிறகை யுடைத்தாய், பரது:காஸஹிஷ்ணுதைக்குஉறுப்பான மநோநைர்மல்யத்தை யுடைத்தாயிருக்கிறபடி. (வெள்ளைக்குருகே) அவன் பிரிகைக்குப் புறம்போலுள்ளும் கரியானானாற் போலேயிறே நீங்களும் கூட்டுகைக்கு உள்ளும்புறம்பும் நிர்மலமாயிருக்கிறபடி.

விளக்கம் - (வினையேன்) – பிரிவையும், சேர்த்தியைப் போன்று நான் பெறவில்லை. சேர்கையானது எப்போதும் இல்லாததாகவும், பிரிவானது எப்போதும் உள்ளதாகவும் இருக்கிறது. (வினையேன்) - அவனுடன் நான் சேர இயலவில்லை என்றால், மீண்டும் அதிலிருந்து தப்ப இயலாதபடி பாபம் செய்தேன். (எனையூழி நைவேன்) - வருத்தத்துடன் எத்தனை கல்பகாலங்கள் கழிந்தன! முன்பு பிரிந்தவர்கள் பதினான்கு ஆண்டுகள் பிரிந்தனர்; அதாவது, பரதன் இராமனைப் பிரிந்தமை; அல்லது பத்து மாதம் பிரிந்தனர்; அதாவது சீதை இராமனைப் பிரிந்தமை ஆயிற்று. (ஆசறு தூவி வெள்ளைக்குருகே) - இதன் மூலம், உள்ளும் புறமும் உள்ள தூய்மையைக் கூறுகிறார். பழிப்பு அற்ற சிறகுகள் கொண்டதாக, மற்றவர்களுடைய துக்கத்தை பொறுத்துக் கொள்ள இருப்பதற்கு உறுப்பாக உள்ள மனதில் குற்றம் ஏதும் இல்லாத நன்மையைக் கொண்டிருத்தல். (வெள்ளைக்குருகே) - அவனுடைய பிரிவிற்கு, அவன் திருமேனியின் புற நிறம் போன்று கருமையாக உள்ளது காரணமாக இருக்கிறது; அது போன்று நீங்கள் அல்லாமல், சேர்த்து வைப்பதற்கு உள்ளும்புறமும் களங்கம் ஏதும் இன்றி உள்ளீர்கள்.

வ்யாக்யானம் - (அருள் செய்தொரு நாள்) ஒருபோது க்ருபை பண்ணி. இவ்வளவில் முகங்காட்டுகையாகிற இதுக்கு மேற்பட அருளில்லையிறே; வெறும் உங்கள் க்ருபையாலே செய்திகோளத்தனையிறே. (மாசறுவித்யாதி) பழிப்பற்று நெய்த்திருந்துள்ள மயிர்முடியை யுடையனாய், அம்மயிர்முடியை நித்யசூரிகள் பேண இருக்கிறவனைக் கண்டு. ஒரு நீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்கிறவனைக் கண்டு.

விளக்கம் - (அருள் செய்தொரு நாள்) - ஒருபோது கருணை காண்பித்து. ஆனால் அருள் நிறைந்தவர்களுக்கு மட்டுமே அல்லவோ க்ருபை செய்யும் குணம் ஏற்படும்? இந்தப் பறவைகளுக்கு அந்தக் கருணை உள்ளது என்று இவள் எப்படி அறிந்தாள் என்பதற்கு விடை அளிக்கிறார்; இந்தப் பிரிவு நேரத்தில் முகத்தைக் காண்பிப்பதைக் காட்டிலும் மேலான க்ருபை வேறு ஏதும் இல்லை. இதனை உங்களுடைய க்ருபையால் மட்டுமே நீங்கள் செய்தீர்கள். (மாசறுவித்யாதி) - எந்தவிதமான குறையும் இன்றி நெய்த்துள்ள தலைமுடியை உடையவனாக, அத்தகைய தலைக்கேசத்தை நித்யஸூரிகள் பேணியபடி உள்ளனர்; அவனை நீங்கள் கண்டு. இவள் உள்ளபோது, நித்யஸூரிகளுக்குத் திருமுகம் காண்பித்தபடி உள்ள அவனை வெறுக்கும் தன்மையில் கூறுகிறார்; மழையை எதிர்பார்த்து நிலம்

உள்ளபோது, கடலில் மழை பெய்யும்படி உள்ளதைப் போன்று உள்ளவனைக் கண்டு.

வ்யாக்யானம் - (ஏசறும்) க்லேசப்படாநின்றாளென்னுதல், நாட்டார் ஏசும் நிலை கடந்தாளென்னுதல். ஏசறுங்கோள் - வடிவைக் காட்டுங்கோளென்றுமாம். அதாகிறது, என்னுடைய வைவர்ண்யத்தை நீங்கள் உங்களுடம்பிலேயணிந்து காட்டுங்கோளென்றபடி. (நும்மையல்லால் மறுநோக்கிலள்) உம்மையொழிய வேறு குளிர்ந்த விழியில்லை. வ்ருத்த கீர்த்தநத்துக்கும் உம்மையொழிய வேறொருவரை யுடையளல்லள்; "ஸகீபிஸ் ஸுகமாஸ்வ" என்னும் நிலையுங் குலைந்தது. (நும்மையல்லால்) "வாராநின்றோம்" என்று ஸ்ரீபரதாழ்வானைப்போலே ஆள் வர விடத்தரியாது. (நும்மையல்லால்) ஸ்வரூப குணங்களை யநுஸந்தித்து தரிக்கும் அளவல்லள். (மறுநோக்கிலள்) உம்மையொழிய பந்துக்கள் நோக்கும் நிலை கழிந்தது. இப்பாட்டுக்கு க்ரியை கீழிற்பாட்டிலேயாதல், மேலிற்பாட்டிலேயாதல். தமிழர் "வினையெச்சமாய்க் கிடக்கிறது" என்று சொல்லுவார்கள். அதாவது, "மறுநோக்கிலள் பேர்த்து மற்று" என்று சொல்லுங்கோள் என்கிற இத்தனையுமிட்டுச் சொல்லவேண்டுகை.

விளக்கம் - (ஏசறும்) - வருத்தத்தை கடந்து நிற்கிறாள். அதாவது நாட்டில் உள்ளவர்கள் கூறும் பழிசொற்களைக் கடந்து நிற்கிறாள். அல்லது "ஏசறுவாய்" என்றால் "வடிவைக் காட்டுவாய்" என்று பொருள்; ஆனால் "ஏசறுதல்" என்பது துக்கத்தைக் காண்பிக்கும் அல்லாமல், வடிவத்தைக் காண்பிக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; எனது பசலை நிறத்தைப் பறவையாகிய நீங்கள் உங்கள் வடிவத்தில் அவனுக்குக் காண்பிப்பீர்களாக என்கிறார். (நும்மையல்லால் மறுநோக்கிலள்) - உம்மை அல்லாமல் வேறு யாருடைய கண்களும் குளிர நோக்கும் பார்வை கொண்டதில்லை. "மறுநோக்கு இலள்" என்பதற்கு நான்குவிதமான இயல்புகளைக் கூறுகிறார். நடந்தவற்றை உரைப்பதற்கு உங்களை அல்லாமல் வேறு யாரையும் கொண்டவள் அல்லள். தோழிமார்கள் இல்லையோ என்றால், "ஸகீபிஸ் ஸுகமாஸ்வ - தோழிமார்களுடன் ஸுகமாக இருப்பாயாக" என்ற நிலையும் குலைந்தது. (நும்மையல்லால்) - அடுத்த இரண்டாவது விதமான இயல்பைக் கூறுகிறார்; "வராமல் நின்றோம்" என்று ஸ்ரீபரதாழ்வான் போன்று, முன்கூட்டியே அனுமனை அனுப்பியது போன்று ஆள் விடாமல் தரியாது. (நும்மையல்லால்) - அடுத்து மூன்றாவது இயல்பைக்

கூறுகிறார்; ஸ்வரூப குணங்களை எண்ணித் தரித்தபடி உள்ள அளவிற்குத் தாங்குபவள் அல்லள். (மறுநோக்கிலள்) - அடுத்து நான்காவது தன்மையைக் கூறுகிறார்; உங்களை அல்லாமல் மற்ற பந்துக்களைக் காணும் நிலையும் நீங்கியது. இந்தப் பாட்டின் முடிவு என்பதைக் கடந்த பாசுரத்தில் கொள்ள வேண்டும். தமிழர், “விளையானது எச்சமாக உள்ளது” என்பர். அதாவது, “மறு நோக்கிலள் பேர்த்து மற்று என்று கூறுங்கள்” என்கிற அனைத்தையும் சேர்த்துக் கூறவேண்டும்.

6-8-9. பேர்த்து மற்று ஓர் களைகண் வினையாட்டியேன் நான் ஒன்று இலேன்
நீர்த் திரை மேல் உலவி இரை தேரும் புதா இனங்காள்
கார்த் திரள் மா முகில் போல் கண்ணன் விண்ணவர் கோனைக் கண்டு
வார்த்தைகள் கொண்டு அருளி உரையீர் வைகல் வந்திருந்தே

பொருள் - நீரில் உள்ள அலைகளின் நீரானது மேலே படாதபடி அவற்றின் மீது ஸஞ்சரித்து இரையைத் தேடும் பெருநாரைக் கூட்டங்களே! எனக்கு உதவ வேண்டியவனால் உதவப்படாமல் இருப்பதற்கான பாபம் செய்த நான், உங்களை அல்லாமல், வேறு ஒரு காப்பாற்றும் வஸ்துவைக் கொண்டவள் அல்லள். ஆகவே, மழைக்காலத்தில் திரண்டுள்ள பெரிய மேகங்கள் போன்ற நிறம் கொண்டவனும், அப்படிப்பட்ட வடிவழகைப் பரமபதத்தில் உள்ளவர்களும் அனுபவிக்கும்படியாக உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணனை நீங்கள் கண்டு, அவன் என் விஷயமாக உங்களிடம் அருளிச்செய்யும் சொற்களைக் கேட்டு, என்னிடம் க்ருபை செய்து, அந்தச் சொற்களை என்னிடம் வந்து இருந்து, அதனையே நான் பொழுதுபோக்காகக் கொள்ளும்படியாக உரைத்தபடி இருப்பீர்களாக.

அவதாரிகை - சில புதாவினங்களைக் குறித்து, நீங்கள் சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டு வந்து என்னை நித்யமாக உஜ்ஜீவிப்பிக்க வேணுமென்கிறாள்.

விளக்கம் - ஒரு சில நாரைகளைக் குறித்து, “நீங்கள் அங்கு சென்றால், அவன் இங்கு வரவில்லை என்றாலும், அங்கு அவன் கூறும் சொற்களைக் கேட்டுக் கொண்டு வந்து என்னை எப்போதும் பிழைத்திருக்கும்படிச் செய்யவேண்டும்”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (பேர்த்து மற்றோர்களை கண் வினையாட்டியேன் நானொன்றிலேன்) தன் பரிகரங்களிலே யொன்றைக் கொண்டு போது போக்குகிறாள் என்னுமளவுங் குலைந்தது. வெறுமையை முன்னிடுமத்தனையிறே ததீயர் பக்கலிலும். உங்களையொழிய வேறொரு ரக்ஷகரை யுடையே னல்லேன். (மற்றோர் களைகண்) பிராட்டிக்கு லங்கைக்குள்ளே ஒரு த்ரிஜடையாகிலு முண்டாயிற்று; காட்டிலே விட்டுப் போந்த தனிமையிலே ஒரு வால்மீகி பகவானாகி முண்டாயிற்று; பர்த்தா பொகட்டால் ஒரு பிதாவாகிலுமுண்டாக வேணுமிறே. (வினையாட்டியேன்) நாயகந்தானே ரக்ஷகனுமா யிருக்குமிறே; அப்படிப்பட்டவன் கைவிட்டுப் போம்படியான பாபத்தைப் பண்ணினேன்.

விளக்கம் - (பேர்த்து மற்றோர்களை கண் வினையாட்டியேன் நானொன்றிலேன்) - தனது பரிகரங்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு பொழுது போக்கிக் கொள்கிறாள் என்ற நிலையும் அகன்றது. அல்லது, "உங்களை அல்லாமல் எனக்கு வேறு ரக்ஷகம் இல்லை" என்று கூறுவதைக் கொண்டு, "பகவத் விஷயத்தில் அல்லவோ, இது போன்று, அவன் அல்லாமல் வேறு ரக்ஷகம் இல்லை என்று கூறவேண்டும்? ஆசார்யனாக உள்ள இந்தப் பரிகரங்கள் விஷயத்திலும் அது போன்று கூற இயலுமோ?", என்பதற்கு விடை அருளிச் செய்கிறார்; அவர்கள் விஷயத்திலும் வெறுமையை மட்டுமே முன்னிடுகிறாள். உங்களை அல்லாமல் வேறு ரக்ஷகரை நான் கொள்ளவில்லை. (மற்றோர் களைகண்) - இங்கு "மற்று களை கண் இலேன்" என்று கூறாமல் "ஓர்" என்று ஏன் கூறினார்? இதற்கு "பிராட்டிக்கு" என்று தொடங்கும் மூன்று வாக்கியங்களில் விடை தருகிறார். ஸீதைக்கு இலங்கையில் ஒரு த்ரிஜடையாவது இருந்தாள்; ஸீதை காட்டில் தனித்து விடப்பட்டபோது ஒரு வால்மீகி பகவான் இருந்தார்; நளனால் தனித்து விடப்பட்ட தமயந்திக்கு ஒரு தந்தையாவது இருந்தார். இது போன்று இங்கும் வேண்டும் அல்லவோ? (வினையாட்டியேன்) - மற்றவர்களால் நலிவடையும்போது, கணவனால் காப்பாற்றப்படும் தன்மையைக் கூறுகிறார்; நாயகன் அல்லவோ ரக்ஷகனாக இருப்பான்! அவனும் கைவிட்டுப் போகும்படியான பாபத்தைச் செய்தேன்.

வ்யாக்யானம் - (நீர்த்திரை மேலுலவி) ஆவரண ஜலம், விரஜை இவையெல்லாம் கடந்தேற வற்றா யிருக்கை. (உலவி) நிலத்திலே சஞ்சரிக்கிறாப்போலே நீரிலே சஞ்சரிக்கிறபடி. (இரை தேரும்) இவற்றின் நடையோடொக்க இதுவுமொரு பௌஷ்கல்யமிறே இவளுக்கு. நான் உபவாஸ க்ருசையா யிருக்க, உங்களுக்கு மிடற்றுக்குக் கீழிழியாதிறே; என்னையும் உங்களைப்போலே யாக்கினாலன்றோ ஜீவித்ததாவது? (புதா) பெருநாரை.

விளக்கம் - (நீர்த்திரை மேலுலவி) - பூமண்டலம் போன்று பலவற்றையும் சூழ்ந்து நிற்கும் ஆவரண ஜலங்கள்; பரமபதத்தின் அளவிற்கு இவள் தூது விடுவதால், இவ்விதம் அனைத்து ஆவரண ஜலங்களும் கூறப்பட்டன; விரஜா நதி போன்ற பலவற்றையும் இவை கடந்து செல்லவல்லதாக உள்ளன. (உலவி) - நிலத்தில் ஸஞ்சரிப்பது போன்று இவை நீரிலும் ஸஞ்சரித்தபடி உள்ளன. (இரை தேரும்) - இவற்றின் நடை போன்று, இவை இரை தேடுவதும் தனது கார்யத்திற்கு ஏற்ற நிலை என்று கொண்டு அருளிச்செய்கிறார்; இவற்றின் நடை போன்று இதுவும் ஒரு குறையில்லாமல் இவளுக்கு உள்ளது. இவை இரை தேடுவது தனது கார்யத்திற்குச் சாதகமாக உள்ள விதத்தைக் கூறுகிறார்; நான் உபவாசம் காரணமாக இளைத்துள்ளபோது, உங்களுக்கு கழுத்துக் கீழே உணவு இறங்காது அல்லவோ? இதனைக் கேட்ட அவை, "இப்போது நாங்கள் இரை தேடவில்லையோ? அது போன்று நீயும் செய்யலாமே!", என்றன. இதற்கு இவள், "என்னையும் உங்களைப் போன்று ஆக்கினால் அலல்வோ நான் தரித்திருக்க இயலும்", என்கிறாள். (புதா) - பெருநாரை.

வ்யாக்யானம் - (கார்த்திரள் மாமுகில் போல்கண்ணன்) எல்லா விடாயும் ஆறுங்கிடீர் அவ்வடிவைக் காணப்பெறில்! இவள் கண்ணுக்குக். கறுப்பாயிருக்கிறதிறே. கறுப்பெல்லாம் திரண்டாற் போலேயிருக்கிற மஹாமேகம் போன்ற வடிவையுடையவன்; கார்காலத்தில் திரண்ட மஹாமேகமென்றுமாம். (மாமுகில்) மாறாதே கொடுக்கவல்ல முகில்.

விளக்கம் – (கார்த்திரள் மாமுகில் போல்கண்ணன்) - இப்போது ஏன் அவன் வடிவத்தைக் கூறவேண்டும் என்றால், அந்த வடிவத்தைக் காணப் பெற்றால் அனைத்து துன்பங்களும் விலகும் என்பதால் ஆகும். இவள் கண்களுக்கு அவன் வடிவம் கறுப்பாக உள்ளது; இங்கு "கறுப்பாக" என்பதற்கு, "குளிர்ச்சி" மற்றும்

“பொறுக்க இயலாமை” என்பதாக இரண்டு பொருள்கள் சிலேடையாக உள்ளன. அனைத்து கறுப்பும் ஒன்றாகத் திரண்டது போன்றுள்ள பெருத்த மேகம் போன்ற வடிவம் கொண்டவன். கார்காலத்தில் திரண்ட மகாமேகம். (மாமுகில்) - மேகத்திற்கு மஹத்வம் என்னவென்றால், மாறாமல் அளிக்கவல்ல முகில் என்பதால் ஆகும். “மாமுகில்” என்றது வடிவம் அல்லது தாராள குணம்.

வ்யாக்யானம் - (கண்ணன்) அவ்வடிவுபோலும் அல்லகிடீர் அகவாயில் தண்ணளியிருக்கும்படி. (விண்ணவர் கோனைக் கண்டு) விடாய்த்தாரிருக்க, மீனுக்குத் தண்ணீர் வார்த்திருக்கிறவனை. பிரிகைக்கு ஸம்பாவனை யில்லாதார்க்குத் தன்னைக் கொடுத்துக்கொடு நிற்கிறவனைக் கண்டு.

விளக்கம் – (கண்ணன்) – “கார்த்திரள்” என்பது போன்றவற்றால் கூறப்பட்ட வடிவத்தை உரைத்த பின்னர், “கண்ணன்” என்று கூறியதன் கருத்தைக் கூறுகிறார்; இந்த வடிவம் போன்று வெளியில் மட்டும் அல்லாமல் உள்ளிலும் க்ருபை உள்ளது. (விண்ணவர் கோனைக் கண்டு) - “விண்ணவர் கோன்” என்று வெறுப்பாகக் கூறுவது ஏன் என்றால், தாகம் எடுத்தவர்கள் உள்ளபோது, மீனுக்குத் தண்ணீர் கொடுப்பவன் போன்று, பிரிவு என்பதே இல்லாத விண்ணவர்களுக்குத் தன்னையே கொடுத்தபடி நிற்பவனைக் கண்டு.

வ்யாக்யானம் - (வார்த்தைகள் கொண்டு) வந்திலனாகிலும், சில வார்த்தைகள் சொல்லக் கடவனிறே. காட்சிக்குமேலே வார்த்தையுங் கேட்க இறே நீங்கள் புகுகிறது. “பாவி நீயென்றொன்று சொல்லாய்” என்னுமவரிறே. இப்போது இவர்க்கு “மாட்டேன்” என்னும் வார்த்தையும் அமையும். வார்த்தை கேட்கைக்கும் முடியப் போய்த் திரியவோ? என்னில்; (வார்த்தைகள் கொண்டருளி - வந்திருந்து - வைகலும் உரையீர்) ஒருகால் போய் அவன் வார்த்தையைக் கேட்டு என் பக்கலிலே க்ருபையைப் பண்ணி வந்திருந்து, அத்தை எனக்கு எப்போதுஞ் சொல்லி என்னை உஜ்ஜீவிப்பியுங்கோள்! அன்றிக்கே, விண்ணவர்கோனான கண்ணனைக் கண்டு, வார்த்தைகள் கொண்டு, “மாசுச:” என்று பலத்தோடே வ்யாப்தமான வார்த்தைகளைக் கொண்டு, என் பக்கலிலே க்ருபையைப் பண்ணி வந்திருந்து வைகலுமுரையீர் என்றுமாம்.

விளக்கம் - (வார்த்தைகள் கொண்டு) - அவன் இங்கு வரவில்லை எனறாலும், ஒரு சில சொற்களை உங்களிடம் கூறுவான் அல்லவோ? அவனைக் காண்பது மட்டும்

அல்லாமல், அவன் சொற்களைக் கேட்பதற்கும் அல்லவோ நீங்கள் அங்கு செல்கிறீர்கள்! "வருவேன்" என்பது போன்று அவன் கூறும் சொற்களை என்று கூறாமல். "சொற்களை" என்று மட்டும் கூறுவது ஏன் என்றால், திருவாய்மொழி (4-7-3) - பாவி நீயென்றொன்று சொல்லாய் - என்று இவள் கூறுவதற்கு ஏற்ப அவன் செய்பவன் அல்லவோ? அவன் "மாட்டேன்" என்று கூறினால் கூட இவளுக்கு உயிர் தரிக்கப் போதுமானது ஆகும். அவனுடைய சொற்களைக் கேட்பதே அவசியமான ஒன்று என இதனையே வாழ்வாகக் கொண்டு, அங்கும் இங்கும் சென்றபடி இருக்கவேண்டுமோ என்று நாரைகள் கேட்பதாக எண்ணி பதில் கூறுகிறாள்; (வார்த்தைகள் கொண்டருளி - வந்திருந்து - வைகலும் உரையீர்) – ஒருமுறை சென்று அவன் வார்த்தைகளைக் கேட்டு, என் பக்கம் க்ருபை செய்து, என்னிடம் வந்து, இங்கு இருந்து, அந்த வார்த்தைகளை எனக்கு எப்போதும் கூறி, என்னைப் பிழைக்க வைப்பீர்களாக; இங்கு "வார்த்தைகள்" என்பது "வாரான், வரும்" என்பது போன்றவை ஆகும். அதாவது, வானவர் தலைவனாகிய கண்ணனைக் கண்டு, அவன் கூறுவதாகிய "மாசுச: - வருந்தாதே" என்பதாக உள்ள பலனுடன் முடியும் சொற்களைக் கேட்டுக் கொண்டு, என்னிடம் நீங்கள் க்ருபை செய்து, இங்கு வந்து இருந்து, அன்றாடம் அவற்றை எனக்கு உரைத்து, என்னைப் பிழைக்க வைப்பீர்களாக.

6-8-10. வந்திருந்து உம்முடைய மணிச் சேவலும் நீரும் எல்லாம்
அந்தரம் ஒன்றும் இன்றி அலர்மேல் அசையும் அன்னங்காள்
என் திரு மார்வற்கு என்னை இன்னவாறு இவள் காண்மின் என்று
மந்திரத்து ஒன்று உணர்த்தி உரையீர் மறு மாற்றங்களே

பொருள் – எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி, இங்கு வந்து இருந்து, உங்களுடைய கண்ணிற்கு இனியதும் கொண்டாடத்தக்கதும் ஆகிய சேவல்களும் நீங்களுமாக, உங்களுடைய அனைத்து உறவினர்களும், ஒன்றாகத் திரள்வதற்கு எந்தவிதமான தடையும் இன்றி, இங்குள்ள மலர்களின் மீது உலவியபடி உள்ள அன்னங்களே! என்னைப் போன்று பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு ஸ்வாமிநியான மஹாலக்ஷ்மியைத் தனது திருமார்பில் கொண்டவனிடம், "இவள் இவ்விதம் ஆனாள். இவள் நிலையைக் காண்பாயாக" என்று எனது நிலையை, அவனும் அவளுமாகத் தனியாக உள்ள சேர்த்தி நிலையில் அறிவித்து, அவன் அருளிச்செய்யும் பதிலை என்னிடம் கூறுங்கள்.

அவதாரிகை - சில ஹம்ஸ மிதுநங்களைக் குறித்து, பிராட்டியுந்தானுமான ஏகாந்தத்திலே என் தசையை விண்ணப்பஞ் செய்து மறுமாற்றம் வந்து சொல்லவேணுமென்கிறாள்.

விளக்கம் - ஆணும் பெண்ணுமாகக் கூடியுள்ள சில அன்னங்களை நோக்கி, “அவனும் அவளும் தனியாக உள்ளபோது எனது நிலையை உணர்த்தி, மறுமொழி கொண்டு வந்து உரைக்கவேண்டும்”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (வந்திருந்து) இதென்ன ஆபத்ஸகத்வந்தான்! உங்களுடைய ஸௌஹார்த்தம் இருந்தபடியென்தான்! இளையபெருமாளை இடுவித்து வெதுப்பி யழைப்பிக்க வேண்டாதிருக்கை. (வந்திருந்து) மஹாராஜருடைய இடரைப் பெருமாள் வினவிக் கொண்டு சென்று தீர்த்தாற் போலே என்னார்த்திக்கெல்லாம் உடன் கேடராயிருந்து.

விளக்கம் – (வந்து இருந்து) - இது என்ன நீங்கள் எனது ஆபத்திற்கு உதவும் நிலைதான் உள்ளது! உங்களுடைய நல்ல எண்ணம் எத்தகையது! இதன் மூலம், இவள் அழைக்காமல் உள்ளபோதிலும் வந்து உதவும் தன்மையும், அதற்கு ஆதாரமாக உள்ள நல்ல எண்ணமும் கூறப்பட்டது. அதாவது ஸுக்ரீவனை இலக்ஷ்மணன் மூலமாக அச்சுறுத்தி அழைத்தது போன்று அழைக்கவேண்டாதபடியாக, தாமாகவே வந்த தன்மை. (வந்து இருந்து) - அந்த அன்னங்கள் தாங்களாகவே வந்தமைக்கு உதாரணம் கூறுகிறார்; ஸுக்ரீவனுடைய துன்பத்தை இராமன் கேட்டு அறிந்து சென்று, அதனை விலக்கியது போன்று, எனது துயரத்திற்கு உடன் நிற்பவர்களாக இருந்து.

வ்யாக்யானம் - (உம்முடைய மணிச்சேவலும் நீருமெல்லாம்) பரமபதத்தில் ஸ்த்ரீபுமான்களா யிருந்தாலும் அடிமைக்கு உறுப்பாயிருக்குமா போலே, இவற்றினுடைய இந்த பேதமும் தனக்குக் கார்யத்துக்கு உடல் என்றிருக்கிறாள். (மணிச்சேவல்) இதுவும் ஒரு சேவலேதான்! தன்னுடைய மணிச்சேவல், கடக்கவிருந்து இவளை உடம்பு வெளுப்பித்துத் தான் குறியழியாதேயிறே இருக்கிறது.

விளக்கம் – (உம்முடைய மணிச்சேவலும் நீருமெல்லாம்) – பரமபதத்தில் ஆண்களும் பெண்களும் என்று உள்ளபோதிலும் பகவத் கார்யத்திற்கு ஏற்றபடி இருப்பது போன்று, இந்த அன்னங்களுடைய ஆண்-பெண் என்ற வேறுபாடு தனது கார்யத்திற்கு ஏற்றபடி உள்ளவையே என்று உள்ளாள். (மணிச்சேவல்) – "மணிச்சேவல்" என்று வர்ணித்ததன் கருத்து, "இதுவும் ஒரு சேவலே ஆகும்" என்பதாகும். மணிச்சேவல் என்றால் அழகான சேவல். "அன்னத்திற்கு ஏற்றபடி ஒரு அழகான சேவல் உள்ளது போன்று இவளுக்கும் இல்லையோ" என்பதற்கு விடை அளிக்கிறார்; "இவளது மணிச்சேவலாகிய ஈச்வரன் இவளை விட்டு அகன்று, இவளை வெளுக்கும்படியாகச் செய்து, தான் அவ்விதம் அகலாமல் உள்ளது", என்கிறார்.

வ்யாக்யானம் - (எல்லாம்) "ஸ புத்ர பௌத்ரஸ்ஸகண" என்னுமாபோலே; பார்யா புத்ராதிகளோடே கூடப் பிறர் காரியஞ் செய்ய ஒருப்பட்டிருப்பாரைப்போலே. (அந்தரமொன்றுமின்றி) என்னைப் போலே பிரிவோடே வ்யாப்தமான கலவியன்றிக்கே யிருக்கப் பெறுவதே. ஸம்ச்லேஷ வர்த்தகமான விச்லேஷமுமின்றிக்கே.

விளக்கம் - (எல்லாம்) – "மணிச்சேவலும் நீரும்" என்பது கணவன் மற்றும் மனைவியைக் கூறுவதால், "எல்லாம்" என்பது புத்திரர்கள் மற்றும் பேரக்குழந்தைகள் ஆகியோரைக் குறிக்கும் என்று கொண்டு, அதற்கான ப்ரமாணம் கூறுகிறார். பாலகாண்டம் (1-99) - ஸ புத்ர பௌத்ரஸ்ஸகண - புத்திர பௌத்ர கூட்டத்துடன் - என்பது காண்க. அதாவது மனைவி மற்றும் புத்திரர்கள் முதலானோருடன் சேர்ந்து மற்றவர்களுடைய செயல்களைச் செய்ய முனைந்துள்ளவர்கள் போன்று. (அந்தரமொன்றுமின்றி) - என்னைப் போன்று பிரிவுடன் கூடிய சேர்க்கை என்பதை நீங்கள் அடையாமல் இருக்கவேண்டும். "ஒன்றும் இன்றி" என்றால் "சேர்க்கையை வளர்க்கவல்ல பிரிவு இன்றி" என்று பொருள்.

வ்யாக்யானம் - (அலர்மேலசையுமன்னங்காள்) மிதுநமாயிருப்பார்க்குப் பூவிலும் கால் வைக்கலா மாகாதே. பூவிலே கால் பொருந்தும்படியான செருக்கன்றோ உங்களது; குறைவற்றா யிருக்கும்படி யிதுவாகாதே. (என் திருமார்வற்கு) எனக்கு அங்கு ஓரடியில்லாமை நான் மிறுக்குப்படுகிறேனோ? "ஸீதாஸமக்ஷம்

காகுத்ஸ்த்தம்" என்று, சொன்ன வார்த்தை விலை போமவள் ஸந்நிதியிலே சொல்லுங்கோள்; நான் பற்றினவடைவே பற்றுங்கோ ளென்கிறாள்.

விளக்கம் – (அலர்மேல் அசையும் அன்னங்காள்) - ஆணும் பெண்ணும் என்று ஜோடியாக உள்ளவர்களுக்கு அனைத்து மலர்களிலும் கால் வைக்கலாம் அல்லவோ? தாமரை மலரில் கால் வைத்து ஏறாலாம்படியாக உள்ள செருக்கு உங்களுக்கு உள்ளதே! எந்தவிதத்திலும் குறைவற்றவர்கள் உள்ள நிலை இது அல்லவோ? (என் திருமார்வற்கு) - எனக்கு அப்படி ஓர் அடி எடுத்து வைப்பதற்கு இயலாமை குறித்து நான் துன்பப்படுகிறேனோ? ஆரண்யகாண்டம் (15-6) - ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தம் - ஸீதை அருகில் உள்ளபோது இராமனை நோக்கி லக்ஷ்மணன் இந்தச் சொற்களைக் கூறினான் - என்பதற்கு ஏற்ப நீங்கள் கூறும் சொற்களை, அவள் முன்பாகக் கூறுவீர்களாக. "என்" என்பதை "திரு" என்பதுடன் சேர்த்துக் கொண்டு பொருள் கூறுகிறார்; அதாவது, திருவாய்மொழி (1-3-1) – மலர் மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள் - என்றும், திருவாய்மொழி (1-3-8) - நம் திருவுடை அடிகள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, நான் பற்றிய விதத்தில் நீங்களும் பற்றுவீர்களாக என்கிறாள். "உம்முடைய மணிச்சேவல்" என்று உங்களைப் புருஷகாரமாகக் கொண்டு சேவலை நான் பற்றியவிதத்தில் நீங்களும் பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு, அவனைப் பற்றுவீர்களாக என்கிறாள்.

வ்யாக்யானம் - (என்னையின்னவாறிவள் காண்மினென்று) பேச்சுக்கு நிலமன்று போலே. (என்னை) அச்சேர்த்தியிலே யடிமை செய்ய ஆசைப்பட்ட என்னை. இப்படி துர்க்கதையானால் இவளென்று "இவள் வைவர்ண்யத்தைத் தம்முடம்பிலே காட்டவும் வற்றாகாதே இவை" என்று சீயர் அருளிச்செய்வர்.

விளக்கம் – (என்னை இன்னவாறு இவள் காண்மின் என்று) – "இன்னவாறு" என்று ஏன் கூறவேண்டும், இவளுடைய நிலையை கொண்டு உரைக்க இயலாதோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவளுடைய நிலையானது சொற்களில் அடங்குவதல்ல. (என்னை) - அந்தச் சேர்த்தியில் கைங்கர்யம் செய்ய விரும்பியபடி உள்ள என்னை. இவ்விதம் இவள் துன்பமான நிலையை அடைந்தாள் என்பதை, "இந்த அன்னங்கள் அவனிடம் சென்று இவளுடைய பசலை நிறத்தைத் தங்ளுடைய உடம்பில் காட்டவும் முடிந்தபடி இருந்தன" என்று நஞ்சீயர் அருளிச்செய்தார்; இதனால்தான் பாசுரத்தில் "கேண்மின்" என்று கூறப்படாமல்,

“காண்மின்” என்றார்; அதாவது இந்த அன்னங்கள் வெளுத்துள்ளதால், இவ்விதம் வெளுத்த விதத்தை இவளும் அடைந்தாள் என்று கருத்து .

வ்யாக்யானம் - அன்றிக்கே, உம்முடைய தேவாரமோ! இவள் அந்த:புர பரிகரமன்றோ வென்னுங்கோள். அர்ச்சை – அர்ச்சக பராதீநையிறே. (மந்திரத்தொன்றுணர்த்தி) ஓலக்கத்திற் சொல்லாதே கொள்ளுங்கோள்; “வத்யதாம்” என்பார் இருக்கவுங்கூடும். அவள் சொல்லே ஜீவிக்குமிடத்தே சொல்லுங்கோள்.

விளக்கம் – அல்லது பெரியபிராட்டியாரின் பரிகரமாக உள்ள தன்மை என்ற விதத்தையும் இவள் கொண்டாள் என்று மூன்றாவதாக ஒரு கருத்தையும் அருளிச்செய்கிறார். உம்முடைய தேவாரமோ! தேவாரம் என்றால் வீடுகளில் ஆராதிக்கும் ஸர்வேச்வரனுடைய திருமேனி விக்ரஹம். அதாவது அர்ச்சாவதாரமாக உள்ள உனக்கு அந்த ரூபம் உன் வசப்பட்டதோ? இவள் உனது அந்தப்புரத்தில் உள்ள பெண்களைச் சேர்ந்தவள் அல்லவோ? அர்ச்சை என்பது அர்ச்சகருக்கு வசப்பட்ட திருமேனி. (மந்திரத்து ஒன்று உணர்த்தி) - அவன் சபையில் உள்ளபோது கூறாமல், பெரியபிராட்டியுடன் தனித்து உள்ளபோது கூறுவீர்களாக. யுத்தகாண்டம் (17-27) - வத்யதாம் – விபீஷணனை நோக்கி ஸுக்ரீவன், “இவன் சொல்லத்தக்கவன்” என்றான் - என்பது போன்றவர்கள் அந்தச் சபையில் இருக்கக்கூடும். அல்லது “மந்திரித்து” என்பதற்கு “சபை அல்லாமல், தனியான இடம்” என்று பொருள் கூறினார்; இனி “இன்ப நிலையில்” என்று பொருள் அருளிச்செய்கிறார்; தனியான இடம் என்றால் கூட அவன் மறுக்க வாய்ப்பு உள்ளது; ஆகவே இன்பநிலையில் உள்ளபோது, அவள் கவனித்துக் கேட்கவில்லை என்றாலும், அவன் விரும்பிக் கேட்பான்; ஆகவே அவளுடைய சொற்களை அவன் கேட்கும் இடத்திற்குச் சென்று கூறுங்கள் என்கிறாள்.

வ்யாக்யானம் - (உரையீர் மறுமாற்றங்களே) அவன் க்ரம ப்ராப்தி தோற்ற வார்த்தை சொல்லவும், அதுதான் ஒண்ணாதென்று “ந கச்சிந்நாபராத்யதி” என்று த்வரிப்பித்துக் கொண்டு வருவார் முன்னே சொல்லுங்கோள். (மந்திரம்) ப்ரணவம். (ஒன்று) அதில் மத்யம பதம்; அதிற் சொல்லுகிறபடியே அநந்யார்ஹதையை விண்ணப்பஞ் செய்து. (உரையீர் மறுமாற்றங்களே) பூர்வாபராதத்தைப் பார்த்து அவன் சொல்லும் வார்த்தைகளையும், ஸம்பந்தத்தையும் நம் தசையையும் பற்ற அவள் சொல்லும் வார்த்தைகளையும் கேட்டு வந்து சொல்லுங்கோ ளென்கிறாள்.

விளக்கம் - (உரையீர் மறுமாற்றங்களே) - அவன் இங்கு முறையாக வரும்விதமாக அவனிடம் நீங்கள் கூறுவீர்களாக. அந்தச் சொற்களையும் கூட, யுத்தகாண்டம் (116-44) - ந கச்சிந்நாபராத்யதி - தவறு செய்யாதவர்கள் யார் உள்ளனர் - என்று விரைந்து வந்து காப்பாற்றுபவள் முன்பாகவே கூறுவீர்களாக. (மந்திரம்) "மந்திரம்" என்பதற்கு "ப்ரணவம்" என்று பொருள் கொள்கிறார். (ஒன்று) - ப்ரணவத்தில் உள்ள நடுப்பதம் "உ", இது பெரியபிராட்டியார். அதில் கூறப்பட்டபடி வேறு யாருக்கும் வசப்படாத நிலையை அவனிடம் விண்ணப்பம் செய்து. (உரையீர் மறுமாற்றங்களே) - முன்பு செய்த குற்றங்களையும் பார்த்து அவள் கூறும் சொற்களையும், நமக்கும் அவனுக்கும் உள்ள ஸம்பந்தத்தையும், நமது நிலையையும் நோக்கி, அவள் கூறும் சொற்களையும் கேட்டு வந்து என்னிடம் கூறுவீர்களாக.

6-8-11. மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு மதுசூத பிரான் அடி மேல்
நாற்றங்கொள் பூம்பொழில் சூழ் குருகூர்ச் சடகோபன் சொன்ன
தோற்றங்கள் ஆயிரத்துள் இவையும் ஒரு பத்தும் வல்லார்
ஊற்றின் கண் நுண் மணல் போல் உருகா நிற்பர் நீராயே

பொருள் – மேன்மையான சொற்களை நன்கு ஆராய்ந்து எடுத்துக் கொண்டு, ஞானத்திற்குக் காரணமாக விளங்கும் வேதங்களை அபகரித்த மது என்ற அஸுரனை அழித்த உபகாரகனின் திருவடிகள் விஷயமாக; பரிமளம் நிறைந்த மலர்கள் கொண்ட பொழில்கள் சூழ்ந்த ஆழ்வார்திருநகரிக்கு நிர்வாஹகரும், வேதங்களுக்குத் தவறாகப் பொருள் கூறுபவர்களை வீழ்த்துபவரும் ஆகிய நம்மாழ்வார் அருளிச்செய்ததாகிய; பகவான் தோன்றுவது போன்று வேதங்களுடைய வெளிப்படுதலாக உள்ள ஆயிரம் திருவாய்மொழிகளில், இவற்றைப் போன்று மற்றொன்று இல்லை என்று கூறலாம்படியாக உள்ள இந்த பத்துப்பாசுரங்களை, இவற்றுக்கான பாவனையுடன் கற்கவல்லவர்கள், நீர் ஊறியபடி உள்ள ஊற்றில் காணப்படும் நுண்ணிய மணல் போன்று நீராக உருகுவர்.

அவதாரிகை - நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் சிதிலராவ ரென்கிறார்.

விளக்கம் - இறுதியாக, “இந்தத் திருவாய்மொழியில் காணப்படும் நம்மாழ்வாருடைய பிரிவாற்றாமை துக்கத்தை எண்ண வல்லவர்கள், தாங்களும் உருகி நிற்பார்கள்”, என்கிறார்.

வ்யாக்யானம் – (மாற்றங்களாய்ந்து கொண்டு) சுரமேறுவாரைப்போலே, பக்தி பரவசராயிருப்பார்க்கு அடைவுபடப் பாசுரமிட்டுச் சொல்லப் போகாதிறே; இவ்வளவிலும் சொற்கள் நேர்பட்டபடி; நல்ல சொற்களைத் தெரிந்து கொண்டு. (மதுசூதபிரானடி மேல்) விரோதி நிரஸநமே ஸ்வபாவமாகவுடையவன் திருவடிகளிலே.

விளக்கம் – (மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு) - மலை ஏறுபவர்கள் போன்று, பக்தி பரவசத்தில் உள்ளவர்கள் நிலையை ஒரு சில சொற்கள் கொண்டு கூற முடியாது அல்லவோ? “சொல்லப் போகாது அன்றோ – கூற இயலாது அல்லவோ” என்று கூறிய பின்னர் “மாற்றங்கள் ஆராய்ந்து” என்பது ஏன் என்பதற்கு “இவ்வளவிலும்” என்று தொடங்கி விடை கூறுகிறார்; இந்த நிலையிலும் அவனைக் குறித்த நினைவு மாறாமல் உள்ளதால், சொற்கள் சீரிய முறையில் உள்ளன. சிறந்த சொற்களை அறிந்து. (மதுசூதபிரானடி மேல்) - “மதுசூதனன்” என்று இந்தத் திருநாமம் கொண்டு அறியவல்லவன் என்பதால், “விரோதிகளை அழிப்பதையே தனது அடையாளமாகக் கொண்டவன்” என்கிறார். இப்படிப்பட்ட இயல்பு கொண்டவன் திருவடிகள் மீது.

வ்யாக்யானம் - (நாற்றங் கொளித்யாதி) “ரஹஸ்ய ஸ்த்தலத்திலே ஆள் விடுகையினாலே வரவு தப்பாது” என்று இவர் தரித்தவாறே, சோலைகளும் நித்ய வஸந்தமானபடி. பரிமளோத்தரமான பூவையுடைத்தான பொழில்கள் சூழ்ந்த திருநகரி. (தோற்றங்க ளாயிரம்) “மந: பூர்வோவாகுத்தர:” என்கிற அடைவால் சொன்னவையல்ல. இவர் கலங்கிச் சொல்லச் செய்தேயும், பகவதவதாரம்போலே ஆவிர்ப்பவித்தன. தோற்றம் - ஆவிர்ப்பாவம்.

விளக்கம் – (நாற்றங் கொளித்யாதி) - ஆனால் இவர் உள்ள இடம் பரிமளம் நிறைந்த மலர்கள் கொண்டு பூம்பொழிலாக இருக்குமோ என்பதற்கு விடை தருகிறார்; “அவனும் அவளுமாக, தனியாக உள்ள இடத்திற்குத் தூது விடுவதால், அவன் வருகை தவறாது”, என்று இவர் உயிர் தங்கியதால், இவர் உள்ள இடத்தில்

காணப்படும் சோலைகளும் எப்போதும் வசந்த காலம் போன்றே இருந்தன. பரிமளம் நிறைந்த மலர்கள் கொண்ட பொழில்களால் சூழப்பட்ட ஆழ்வார்திருநகரி. (தோற்றங்கள் ஆயிரம்) – "மந: பூர்வோவாகுத்தர: - மனம் முன்பாகவும், சொற்கள் பின்பாகவும்" என்பதாக உள்ள முறையில் இவர் கூறவில்லை. அதாவது இவர் உள்ளம் கலங்கிக் கூறியபோதிலும், அவை பகவத் அவதாரம் போன்று, தாமாகவே வெளிப்பட்டன. தோற்றம் என்பது ஆவிர்ப்பாவம்.

வ்யாக்யானம் - மந்த்ரங்களை ருஷிகள் காணுமாபோலே. "சொற்பணி செய் ஆயிரம்" என்று, "ஆழ்வாருடைய வாக்கிலே புக்கு அங்கிட்டுப் பிறந்து நாம் சுத்தராயடிமை செய்யவேணும்" என்று அச் சொற்கள்தாம் "என்னைக் கொள், என்னைக் கொள்" என்று வந்து அடிமை செய்கிறபடி, அவைதிகர் வாக்கில் புக்க தோஷம் தீர்ந்தது இப்போதிறே சொற்களுக்கு. "போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூசாகும்" என்கிறபடியே, ஆழ்வார் வாக்கிலே பிறக்கையாலே முன்புள்ள தோஷமும் பின்புள்ள தோஷமும் தீர்ந்தது காணும் சப்தத்துக்கு. (ஊற்றின் கணித்யாதி) இவை அப்யஸிக்கப் படாதன என்கிறார். அதாவது, என் ஆர்த்த த்வநியைக் காட்டி நாட்டையடைய அழித்தே னென்கிறார். இவர் க்லேசம் அவன் முகங்காட்டத் தீரும்; இப்பாசுரம் நித்யமாகையாலே, கேட்டார் தரிக்கமாட்டார்; ஊற்றிடத்திலுண்டான நுண்ணிய மணல்போலே சிதிலாந்த:கரணராய் நீராயுருகா நிற்பர். இதுக்கு பலமாய்ச் சொல்லிற்றாயிற்றென்? என்னில்; பகவத் குண வித்தர் பாசுரங் கேட்டழிகையும் ப்ராப்யாந்தர்க்கதமாகையாலே இதுதானே பலமென்கிறது.

விளக்கம் – "தாமாகவே அவதாரம் போன்று வெளிப்பட்டன" என்றால், "ஆழ்வார் சொன்ன" என்று கூறுவது எப்படி என்பதற்கு விடை அளிகிறார்; முன்பே உள்ள மந்த்ரங்களை அந்தந்த ரிக்ஷிகள் கண்டு கூறுவது போன்று ஆகும். "மனம் முன்பாகவும், சொற்கள் பின்பாகவும்" என்று கூறியதை விளக்குகிறார். திருவாய்மொழி (1-10-11) – சொற்பணி செய் ஆயிரம் - என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து சொற்களும், "ஆழ்வாருடைய திருவாக்கில் நாம் புகுந்து, அங்கிருந்து பிறந்து, தூய்மையை அடைந்து, கைங்கர்யம் செய்யவேண்டும்" என்பதாகத் தீர்மானித்து, "என்னை இடுவீராக, என்னை இடுவீராக" என்று வந்து கைங்கர்யம் செய்தன. ஆழ்வாருடைய திருவாக்கிலிருந்து சொற்கள் வந்ததால், அவற்றுக்கு உள்ள ஏற்றம் என்ன என்பதைக் கூறுகிறார்; பேதங்களுக்கு முரணாக

உரைப்பவர்களுடைய வாக்கில் நின்ற தோஷம், அவற்றுக்கு நீங்கின. இப்போது அவற்றில் தோஷம் நீங்கினாலும், மேல் உள்ள தோஷங்கள் என்னவாகும் என்பதற்கு விடை தருகிறார்; திருப்பாவை (5) - போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூசாகும் – என்பதற்கு ஏற்ப, ஆழ்வாருடைய திருவாக்கில் பிறந்த காரணத்தால், இந்தச் சொற்களுடைய முன்பிருந்த தோஷம் மற்றும் வரவுள்ள தோஷம் ஆகிய அனைத்தும் இல்லாமல் போயின. (ஊற்றின் கணித்யாதி) - இந்தப் புலம்பல் ஒலிகள் இதுவரை கற்கப்படாதவை ஆகும் என்கிறார். அதாவது, “எனது துயரம் நிறைந்த சொற்கள் மூலம் இந்த நாட்டினை முழுவதுமாக துன்பத்தில் ஆழ்த்தி அழித்தேன்”, என்கிறார். இவருடைய துன்பமானது அவன் தனது திருமுகத்தைக் காண்பித்தால் தீரும். இந்தப் புலம்பல்கள், அவன் தனது திருமுகத்தைக் காண்பிக்கும் நாள் முடிய நித்யமாகத் தொடர்வதால், இதனைக் கேட்பவர்கள் தாங்கமாட்டார்கள். ஊற்றில் உண்டான நுண்ணிய மணல் போன்று உருகும் மனம் கொண்டவர்களாக, நீராய் உருகி நிற்பார்கள். இதற்குப் பலனாகக் கூறப்பட்டது என்ன? பகவானுடைய குணங்களில் ஈடுபட்டவர்கள், இந்தப் பாசுரம் கேட்டு தளர்ந்து அழிவதும், பேற்றிலே சென்று சேர்வதும் என்றுள்ளதால், இவையே பலன் ஆயிற்று.

திருவாய்மொழி ஆறாம் பத்து எட்டாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும் ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 7)

சீதக்கடல் ப்ரவேசம்

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - கீழ்த்திருமொழியிலே "திருக்கோட்டியூர் கண்ணன் சேசவன் நம்பி பிறந்தினில்" என்று தொடங்கி, "திருக்கோட்டியூர் மன்னு நாரணன் நம்பி பிறந்தமை" என்று அவதார வ்யாபாரத்தையெல்லாம் அநுபவ பூர்வகமாக வருளிச் செய்தார். இனிமேல் திருவடிகளில் நின்றும் திருமுடியளவாக அநுபவித்து அநுபவித்த ப்ரகாரத்தை யசோதைப்பிராட்டி பாசுரத்தாலே விருப்பம் தோற்றவருளிச் செய்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - கீழில் திருமொழியிலே, "திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" என்று தொடங்கி, "திருக்கோட்டியூர் மன்னு நாரணன் நம்பி பிறந்தமை" என்று தலைக்கட்டுகையாலே திருவவதரித்தருளின ப்ரகாரத்தை தத்காலோபலாளநங்களோடே அநுபவித்து ஹ்ருஷ்டரா யருளிச்செய்தார்; இனிமேல், இப்படி திருவவதரித்தருளினவனுடைய திவ்ய விக்ரஹ வைலக்ஷண்யத்தை தத்காலத்தில் யசோதைப்பிராட்டி அநுபவித்தாப்போலே தத்பாவ யுக்தராய்க் கொண்டு திருவடிகளில் நின்றும் திருமுடியளவாக அநுபவித்து, அநுபவித்த ப்ரகாரத்தை, அப்போது அவள் பேசின பாசுரத்தாலே ஆதரம் தோற்ற அருளிச்செய்கிறார்.

விளக்கம் - முதல் திருமொழியில், பெரியாழ்வார் திருமொழி (1-1-1) - திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில் - என்று தொடங்கி, பெரியாழ்வார் திருமொழி (1-1-1) - திருக்கோட்டியுர் மன்னு நாரணன் நம்பி பிறந்தமை - என்று நிறைவு செய்தார். இப்படி திருஅவதாரம் செய்த விதத்தை, அந்நாளில் நிகழும் ஆயர்களின் குலாவல்களோடு அனுபவித்து மகிழ்ந்து அருளிச்செய்தார். இந்தப் பத்தில், திருஅவதாரம் செய்தவனுடைய திவ்யமான வடிவிற்கே உரிய தனித்தன்மைகளை யசோதைப்பிராட்டி, அந்நாளில் அனுபவித்ததை, தானும் அந்தப் பாவனையோடு அனுபவிக்கிறார். இவ்வாறு திருவடி தொடங்கி திருமுடி வரை அனுபவித்து, தான் அனுபவித்த விதத்தை, அந்நாளில் யசோதை பேசியவாறே, ப்ரீதி தோன்ற இப்பத்தினை அருளிச்செய்கிறார்.

1-2-1 சீதக்கடலுள் அமுது அன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்து உண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே பவள வாயீர் வந்து காணீரே

பொருள் - குளிர்ந்த கடலில் பிறந்த அமிர்தத்தின் சாரமாக உள்ள பெண் அமிர்தமாகிய மஹாலக்ஷ்மியைப் போன்ற தேவகிப்பிராட்டியானவள், பூமாலையால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய யசோதைப்பிராட்டியிடம் அனுப்பிய, பருவத்திற்குத் தக்க அறிவு இல்லாத குழந்தையானது, தனது கையால் தனது திருவடியைப் பிடித்துச் சுவைத்து தனது பவளவாயில் வைத்து உண்ணும் தாமரைத் திருவடிகளை வந்து காணுங்கள்! பவளம் போல் சிவந்த இதழ்களை உடைய பெண்களே! விரைவாய் வந்து காணுங்கள்!

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (சீதமித்யாதி) அகாதமாகையாலே குளிர்ச்சி மாறாதிருக்கிற ஸமுத்ரத்தில் "கடலுள்ளமுது" என்கையாலே புறவமுது தோன்றிற்றிறே. "விண்ணவரமுதுண வமுதில் வரும் பெண்ணமுது". பரோபகார சிந்தை பண்ணுகையாலே இந்த தேவகியும் பரோபகாரமாக ஈச்வரனைத் திருவாய்ப்பாடி முதலாக எல்லார்க்கும் உபகரித்தாளிறே. இவ்வுபசாரம் கம்ஸ பீதி மூலமாகையாலே. "உள்ளமுதன்ன தேவகி" என்கையாலே வைதர்ம்யத்திலேகதேச த்ருஷ்டாந்தமாகக் கடவது. பிறப்பிக்கப் பிறந்த அம்ருத துல்யையான ஸாது ஜனங்களுக்கு அக்ரேஸரையான தேவகியார் புஷ்பாதிகளாலே அலங்க்ருதமான

குழலையுடைய யசோதைப் பிராட்டிக்குப் போகவிட்ட. “போத்து” என்றது போக்கினவென்றபடி. “அந்த” என்று சுட்டாகவுமாம். அன்றிக்கே, “போத்தந்த” என்று ஒரு சொல்லாய் கிடக்கிறதாய், அத்தாலும் போகவிட்டென்றபடி.

(பேதை) பருவத்துக்குத் தக்க அறிவில்லாமை, (குழவி) பருவம் (பிடித்தித்யாதி) திருக்கையாலே திருவடிகளைப் பிடித்து. “தேனே மலரும் திருப்பாதம்” என்று தன் திருவடிகளில் விழுந்தவர்கள் சொல்லக் கேட்கையாலே, “இது பரீக்ஷிக்க வேணும்” என்று திருப்பவளத்தில் வைத்தானென்னுதல்; “அழுங்குழவி போல்”வார் விரும்புகையாலே தானும் தாரக போக்யங்களாக விரும்பினானென்னுதல்; அன்றிக்கே அந்தர்க்கதமான வையமேழுக்கும் சிறைச்சோறு ஆக்கினானாதல், இவை புறப்படாமல் திருவிரலாலே கண் செறியிட்டானாதல். இவர் அவதாரத்தில் மெய்ப்பாட்டெல்லாம் தோற்றி, அநுபவிக்கிறாரிறே. (பாதக்கமலமித்யாதி) “வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணி”ய வேண்டுகையாலே இவர் காட்டக் காணவேணுமிறே. “வேதப்பயன் கொள்ளவல்லார்”வரிறே. (பாதமித்யாதி) திருவடித்தாமரைகளை வந்து காணுங்கோளென்கிறார். அறிவுடையார் காட்டக் காணவேணுமிறே.

“பவளவாயீர் வந்து காணீரே” என்று பின்பு மருளிச்செய்கையாலே ப்ரபத்தியின் மேலேறின பக்தியையும் பவ்யதையையு முடையவர்கள் நின்ற நின்ற நிலைக்குள்ளேயுள்ளே புகுந்து தர்சிக்க யோக்யரென்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (சீதக்கடல் உள்ளமுதன்ன தேவகி) அகாதமாகையாலே குளிர்த்தி மாறாத ஸமுத்ரத்திலே தேவபோக்யமாகப் பிறந்த அம்ருதம் புறவமுதாம்படி, “அமுதில் வரும் பெண்ணமுது” என்கிறபடியே உள்ளமுதாகப் பிறந்த பிராட்டியோடொத்த தேவகிப்பிராட்டி. அதாவது, அவள் பரோபகார சீலையானாப்போலே, இவளும் பரோபகார சீலையென்றபடி. (கோதைக் குழலாளசோதைக்குப் போத்தந்த) பூமாலையாலே அலங்க்ருதமான குழலையுடைய யசோதைப் பிராட்டிக்கு, போகவிட்ட - வரவிட்டவென்றபடி. “போத்தந்த” என்று ஒரு முழுச்சொல்லு.

விளக்கம் – (சீதக்கடல் உள் அமுது அன்ன தேவகி) – ஆழமானது என்பதால், எப்போதும் குளிர்ச்சி மாறாதபடி உள்ள கடலிலே, திருவாய்மொழி (6-1-2) -

விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுது - என்று தேவர்கள் சுவைத்து அனுபவிக்கப் பிறந்த அமிர்தத்தின் சாரமாக உள்ள மஹாலக்ஷ்மியைப் போன்ற தேவகிப்பிராட்டி. அதாவது, மஹாலக்ஷ்மி எவ்விதம் சீலத்தால் பிறருக்கு உதவி செய்கிறாளோ, அதே போன்று தேவகியும் தான் க்ருஷ்ணனை அனுபவிக்காமல், திருஆயர்ப்பாடியில் உள்ள அனைவருக்கும் தன் பிள்ளையை அளித்து உதவி செய்தவள் ஆவாள். (கோதைக்குழலால் அசோதைக்குப் போத்தந்த) - பூமாலையால் அலங்கரிக்கப்பட்ட யசோதைப்பிராட்டியிடம் வரவிட்ட.

மாமுனிகள் வ்யாக்யானம் - (பேதைக்குழவி) "முக்தச்சிசு:" என்னுமாபோலே. (பேதை) பருவத்துக்குத் தக்கவறிவில்லாமை. (குழவி) பருவம். (பிடித்துச் சுவைத்துண்ணும்) திருக்கையாலே பிடித்துத் திருப்பவளத்திலே வைத்து ஆஸ்வாதித்து புஜிக்கும். "வடதளமதிசய்ய ரங்கதாமந்! சயித இவார்ணவ தர்ணக: பதாப்ஜம் | அதிமுகமுதரே ஜகந்தி மாதும் நிததித வைஷ்ணவ போக்யலிப்ஸயாவா"; இத்தால் "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்றும், "தேனே மலரும் திருப்பாதம்" என்றும் சொல்லக் கேட்டிருக்கையாலே திருவடிகளின் போக்யதை தன்னைப் பரீக்ஷிக்கைக்காக, பருவத்துக்கு அநுகுணமான வ்யாபாரம் செய்வாரைப்போலே செய்தானாதல்; "வையமேழும் கண்டாள்" என்னும்படி திருவயிற்றில் கிடக்கிற லோகங்களுக்குச் சிறைச்சோறாக்கினானாதல்.

விளக்கம் - (பேதைக்குழவி) இளம்பிள்ளையாக, பருவத்திற்குத் தக்க அறிவு இல்லாத குழந்தை. (பிடித்துச் சுவைத்து உண்ணும்) - திருக்கையாலே திருவடியைப் பிடித்து, தன்னுடைய திருப்பவளவாயில் வைத்து சுவைத்து உண்ணும். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-54) - வடதலம் அதிசய்ய ரங்கதாமந் சயித இவ அர்ணவதர்ணக: பதாப்ஜம் அதிமுகம் உதரே ஜகந்தி மாதும் நிததித வைஷ்ணவ போக்ய லிப்ஸயா வா - திருவரங்கனே! அழகாக சயனித்துள்ள கடலின் குட்டியோ என்று காண்பவர்கள் வியக்கும்வண்ணம் ஆலிலை மீது சயனித்து, தாமரை போன்ற சிறிய திருவடிகளை, திருஉதடுகளில் வைத்தபடி இருந்தாய். இதன் காரணம் என்ன? உனது திருவயிற்றில் உள்ளடக்கிய உலகங்களை மீண்டும் அளப்பதற்காகவா (அல்லது) ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகவும் மதுரமாக உள்ள உனது திருவடிகளின் இனிமையை சுவைக்க வேண்டும் என்பதற்காகவா? – என்பது காண்க. இவ்விதம் சுவைப்பதன் மூலம், புருஷஸூக்தம் - விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: - விஷ்ணுவின் பரமபதத்தில் அமிர்தம் போன்ற மகிழ்ச்சி

உள்ளது – என்றும், திருவாய்மொழி (1-5-5) - தேனே மலரும் திருப்பாதம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “இப்படி நம்முடைய திருவடியானது அவ்வளவு இனிமையாக உள்ளதா? எங்கே பரீட்சை செய்து பார்ப்போம்” என்று தன்னுடைய திருப்பவளவாயில் வைத்து சுவைத்து, தனது வயதிற்கு ஏற்ற குறும்பினைச் செய்து உண்டு. அதாவது, எவ்வாறு சிறையுள் உள்ளவர்களுக்கு உணவு அளிப்பார்களோ, அதனைப் போன்று, பெரியாழ்வார் திருமொழி (1-1-6) - வையம் ஏழும் கண்டாள் - என்று திருவயிற்றில் இருக்கிற உலகங்களுக்கெல்லாம் தன் திருவடிகளில் தேனைச் சொரிந்து இனிமையை அளிக்கிறான்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (பாதக்கமலங்கள் காணீரே) இப்படி இருந்துள்ள திருவடித்தாமரைகளை வந்து காணுங்கோள். கமலம் என்கையாலே திருவடிகளிலுண்டான நிறத்தையும், சைத்ய மார்தவ ஸௌரப்யாதிகளையும் சொல்லுகிறது. (பவளவாயீர் வந்து காணீரே) பவளம்போலே சிவந்த அதரத்தையுடையீர் வந்து காணுங்கோளென்று, யசோதைப்பிராட்டி, தான் அநுபவித்த அம்சத்தை ஸஜாதீயைகளாய் அநுபுபூஷுக்களா யிருப்பாரையும் ச்லாகித்துக் கொண்டு அழைத்துக் காட்டின பாசுரத்தாலே அருளிச்செய்தாராய்த்து.

விளக்கம் - (பாதக்கமலங்கள் காணீரே) - இப்படியாக உள்ள தாமரைத் திருவடிகளை வந்து காணுங்கள். கமலம் என்பதன் மூலம், திருவடியில் உண்டாகியுள்ள நிறத்தையும், சைதந்யத்தையும், மென்மையான தன்மையையும், எளிமைத் தன்மையையும் கூறினார். (பவளவாயீர் வந்து காணீரே) – “பவளம் போல் சிவந்த இதழ்களை உடைய பெண்களே வந்து காணுங்கள்” என்று யசோதைப்பிராட்டி, தான் அனுபவித்த அம்சத்தை, தன்னைப் போன்று அன்பு கூடியவர்களாகவும், அனுபவிக்க விரும்புபவர்களாகவும் உள்ளவர்களைக் கொண்டாடிக் கொண்டு அழைத்துக் காண்பிக்கிறாள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 6)

பெரிய திருமொழி முதல் பத்து முதலாம் திருமொழி
வாடினேன்

1-1-1. வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந் துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வது ஓர் பொருளால்
உணர்வவெனும் பெரும் பதம் திரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

பொருள் - மிகுந்த துன்பங்கள் அனைத்திற்கும் இருப்பிடமாகவும், துன்பங்கள் அனைத்திற்கும் காரணமாகவும் உள்ள சரீரத்தில் உண்டாகி, சரீரம் மற்றும் ஆத்மா என்று பிரித்தறிய இயலாதபடி ஒன்றாகப் பொருந்தினேன். இவ்விதம் நீண்ட காலம் பொருந்தி இருந்து, இளைய வயது கொண்ட பெண்கள் அளிக்கின்ற சேர்க்கையை எப்போதும் எண்ணியபடி, அவர்கள் சென்ற பாதையில் பின் தொடர்ந்து சென்றேன். இவ்விதம் எந்த ஒன்றிலும் பொருந்தாமல், ஒவ்வொரு விஷயங்களுடைய சிறப்புகளைத் தேடி, அந்தந்த விஷயங்களில் வைக்கப்பட்ட மனத்தால் துக்கத்தை அனுபவித்தேன். பற்றுக்கோல் இல்லாத கொடி போன்று வாடினேன். இவ்விதம் வாட்டம் கொண்ட நான், பிழைப்பதற்கு ஏற்றதொரு

ஆழ்பொருளால், ஸர்வேச்வரனுடைய க்ருபையால், ஞானம் என்னும் ஒரு பெரிய இடத்தை உள்ளது உள்ளபடி அறிந்து, "பகவத் விஷயமே நன்று, ஸம்ஸாரம் தீயது" என்று உணர்ந்தேன். இவ்விதம் உணர்ந்த நான், அவனுடைய திருநாமத்தை உரைக்கவும் தகுதியற்ற நான், "நாராயணா" என்னும் திருநாமத்தை அறிந்தேன்.

அவதாரிகை - நம்மாழ்வார், ஸர்வேச்வரனை ஸாக்ஷாத்கரித்தவநந்தரம் தாம் பெற்ற பேறறியாதே, "இந்நின்ற நீர்மை இனியாமுறாமை" என்று கீழ்நின்ற நிலையை அநுஸந்தித்தாற் போலே, இவரும், பகவத்விஷயீகாரம் பிறந்த பின்பு தாம் கீழ்கின்ற நிலையையெல்லாம் அநுஸந்தித்து "வாடினேன்" என்கிறார்.

விளக்கம் - ஸர்வேச்வரன் தனது அருளால் அருளி தன்னை அனுபவிக்கும்படிக்கு எல்லாவிதமான வினைகளையும் திருமங்கையாழ்வாரிடமிருந்து போக்கினான். இருந்தாலும், ஏன் இவர் தனது முந்தைய செயல்பாடுகளைச் சொல்லி வருந்துகிறார்? இப்படி அன்றோ நம்மாழ்வாரும் இருந்தார்! நம்மாழ்வாரும் ஸர்வேச்வரனை உள்ளது உள்ளபடிக்குக் கண்ட பின்பும், தான் பெற்ற பேற்றினை அறியாது, திருவிருத்தம் (1) - இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - என்று தன்னுடைய கீழ் நிலையை எண்ணி வாடியே விண்ணப்பிதார். இப்படியே இந்த ஆழ்வாரும் தன்னுடைய கீழ்மையான நிலைகளையெல்லாம் எண்ணி "வாடினேன்" என்கிறார்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்